2008 நவம்பர் 13]

புரியவில்லை. எப்படியிருந்தாலும் நல்லது சொல்லியிருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன். அதை மறுபடியும் நான் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன். ஆனால், இறந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அதுகுறித்து எனக்கு விவரம் தெரியவில்லை. விவரம் அறிந்து சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**25—**

**கட்டடம்**

***54559—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ராசிபுரம் போக்குவரத்துப் பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ராசிபுரம் பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி ராசிபுரத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தற்போது தேசிய நெடுஞ்சாலையருகே இயங்கிக்கொண்டிருக்கிறது. தற்போது அந்த நெடுஞ்சாலை விரிவாக்கப் பணி காரணமாக, அந்தக் கட்டடம் எல்லாம் இடிக்கப்பட்டு, வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. தினந்தோறும் தகுதிச் சான்று பெறுவதற்கு 200 வாகனங்களும், புதியதாகப் பதிவு செய்வதற்கு 300-க்கும் மேற்பட்ட வாகனங்களும், காலாண்டு வரி செலுத்துவதற்காக கிட்டத்தட்ட 2,100

வாகனங்களும் அங்கே வந்துகொண்டிருக்கின்றன. தினந்தோறும் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காக, 500-க்கும் மேற்பட்ட நபர்கள் வருமளவுக்குச் சிறப்பாக அது இயங்கிக்கொண்டிருக்கிறது. தற்போது வருவாய்த் துறையின் மூலமாக 16,000 சதுர அடி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே அதற்கான நிதியை ஒதுக்கி சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு வரை 46 R.T.O. அலுவலகங்கள் இருந்தன. இந்த ஆட்சி அமைந்த பிறகு, புதியதாக 15 R.T.O. அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல பகுதி அலுவலகங்கள் இதுவரை இருந்தவை 35. இப்போது 10 அலுவலகங்கள் புதியதாக திறக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, கட்டடங்கள் என்று வருகின்றபோது, ஒவ்வோர் ஆண்டும் கிட்டத்தட்ட 19 புதிய கட்டடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வோர் ஆண்டும் 5 R.T.O. அலுவலகக் கட்டடங்கள், 5 யூனிட் அலுவலகக் கட்டடங்கள் நாம் கட்டிக்கொண்டிருக்கிறோம். ஆறேழு இடங்கள் இன்றைக்கு வருவாய்த் துறையின் சார்பாக எங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வரும் ஆண்டு அந்த இடங்களிலே புதிய கட்டடங்கள் கட்ட முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயத்திலே வட்டார வாகன ஆய்வாளர் அலுவலகம், 20 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

2008 நவம்பர் 13]

சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக வருவாய்த் துறைமூலமாக இடம் கையகப்படுத்தப்பட்டு, அதற்காகப் பரிந்துரையும் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுத் திட்டத்தில் அது சேர்க்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதோடு கன ரக வாகனங்கள் உரிமம் பெறுகின்றபோது, லைசென்ஸ் பெறுகின்றபோது கல்வித் தகுதியைக் கட்டாயமாக்கி வைத்திருக்கிறார்கள். எட்டாம் வகுப்பு படித்து இருக்கவேண்டுமென்று கல்வித் தகுதியை வைத்திருக்கிறார்கள். ஜனநாயக நாட்டிலே, ஏழையெளிய தொழிலாளர்கள் படித்திருந்தால்தான் உரிமம் பெற முடியும் என்று சொன்னால் அது மிகவும் வேதனைக்குரிய விஷயம். அதைக் கனிவோடு பரிசீலித்து மாற்றியமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாமல் கேட்கிறீர்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வருவாய்த் துறையிலிருந்து, அரூர் யூனிட் அலுவலகம், ராசிபுரம் யூனிட் அலுவலகம், ஸ்ரீவில்லிபுத்தூர் யூனிட் அலுவலகம், அதேபோல, R.T.O. அலுவலகங்களுக்கு இராணிப்பேட்டை, செங்கல்பட்டு போன்ற இடங்களிலே இடம் தந்திருக்கிறார்கள். வரும் ஆண்டில் அங்கெல்லாம் கட்டடங்கள் கட்டப்படும். காங்கேயத்தில் இடம் இருக்குமானால், உறுதியாக வரும் ஆண்டிலே எடுத்துக்கொண்டு கட்டடம் கட்டப்படும். ஏனென்றால், இடமிருந்தால் உடனடியாகக் கட்டடம் கட்டுவதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

கல்வித் தகுதியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கல்வித் தகுதி நிச்சயமாக லைசென்ஸ் பெறுவதற்கு அவசியம் தேவைப்படுகிறது. ஏனென்று சொன்னால், இந்த லைசென்ஸ் பெற ஓரளவுக்கு அந்த சிக்னலைக் கற்றுக்கொள்வதற்காகவாவது அந்தக் கல்வித் தகுதி தேவையாக இருக்கிறது. டிரைவர்கள் நம் மாநிலத்தில் மட்டும் ஓட்டினால் பரவாயில்லை; அண்டை மாநிலங்களுக்குச் செல்கின்றபோது அங்கிருக்கின்றதையும் தெரிந்துகொள்கின்ற அளவுக்கு ஓரளவு அடிப்படைக் கல்வி இருந்தால்தான் ஓட்டுநர் உரிமம்

கிடைக்கும். அதிலே கல்வித் தகுதியைத் தளர்த்தக்கூடிய எண்ணம் அரசுக்கு இல்லை. அவசியம் கல்வித் தகுதி இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் பொன்னேரிக்கரைப் பகுதியில் போக்குவரத்துத் தலைமை அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. உடனடியாகத் தலைமைக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருப்பார்களேயானால், அதை ஆராய்ந்து, அங்கு விரைவாக வேலையை முடிப்பதற்குரிய பணிகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகரம், கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரமாகும். அங்கே இருக்கின்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கடந்த 3 ஆண்டுகளாக சுமார் 2 இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இட வசதியும் அங்கே இல்லாமல் இருக்கிறது. பல ஆண்டுகளாக அங்கே சொந்த அலுவலகம் வேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்களுடைய நகரின் அத்தியாவசியத் தேவையை உணர்ந்து அங்கே சொந்த இடத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டித் தருவாரா என்று கேட்கும் அதேநேரத்தில், செட்டிக்குளம் பகுதியிலே ஒரு பணிமனை வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கேட்டு, நீங்களும் வாக்கு தந்திருக்கிறீர்கள். சமீபத்திலே நீங்கள் நாகர்கோவில் வந்திருந்தபோதுகூட அங்கே அந்தப் பணிமனை அமைப்பதற்கான உறுதியைத் தந்திருக்கிறீர்கள். அதையும் உடனடியாக அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2008 நவம்பர் 13]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் குறித்துக் கேட்கப்பட்ட கேள்வியிலே போக்குவரத்துக் கழக டெப்போ அமைக்கப்படுமா என்று கேட்கிறார். செட்டிக்குளம் பகுதியிலே சொந்த இடத்திலே டெப்போ அமைக்கின்ற பணி இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று ஏற்கெனவே அங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் இடம் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. அப்படி சொந்தக் கட்டடம் கட்டுவதற்குரிய இடம் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக ஒதுக்கிக் கொடுப்பார்களேயானால், வரும் ஆண்டிலே நிச்சயமாக அங்கு கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. அதற்கென்று ஒரு ஏக்கர் நிலமும் கிட்டத்தட்ட 3 வருடங்களுக்கு முன்னால் வாங்கப்பட்டது. வாங்கிய பிறகு பாதி இடம், அதாவது அரை ஏக்கர் இடத்தை நெடுஞ்சாலைக்காக எடுத்துக் கொண்டார்கள். பிறகு அதிலே கட்டடம் கட்ட முடியாது என்று அதிகாரிகள் அந்த இடத்தை அப்படியே ஒதுக்கி வைத்துவிட்டார்கள். பிறகு எப்படிக் கட்டுவது என்று கேட்டால் இடம் வாங்கிக் கொடுங்கள்; நாங்கள் கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆத்தூரைப் பொறுத்தமட்டில், தலைவாசல் தொகுதி, வாழப்பாடியை உள்ளடக்கிய மத்தியப் பகுதியாகும். அங்கே ஓர் R.T.O. office கூட வேண்டும் என்று நான் அமைச்சரிடத்திலே விண்ணப்பம் கொடுத்திருக்கின்றேன். ஆகையினாலே வட்டார அலுவலகத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும். அங்கே ஆத்தூரிலே R.T.O. office இயங்க வேண்டும் என அமைச்சரைத் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மட்டும் R.T.O. அலுவலகங்களுக்கு 11 இடங்களிலே புதிய கட்டடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறோம். திருவாரூர், சேலம் மேற்கு, திருச்செங்கோடு, திருவண்ணாமலை, பெரியகுளம், புதுக்கோட்டை, கடலூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி,

சங்ககிரி, தென்காசி போன்ற இடங்களிலே புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. யூனிட் அலுவலகங்களும் 8 இடங்களிலே புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஆத்தூரிலே இடம் இருக்குமானால்—நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், R.T.O. அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்குரிய நிதியைப்பற்றிப் பிரச்சினை இல்லை; அரசிடமிருந்து நிதி உடனடியாகக் கிடைக்கும்; அங்கே இடம் இருக்குமானால் உடனடியாகக் கட்டடம் கட்டப்படும். நான் அங்கு சென்றிருந்தபோதே ஆத்தூர் யூனிட் அலுவலகத்தை R.T.O. அலுவலகமாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். வருகிற ஆண்டு அதனுடைய கணக்குகளைப் பார்த்து, வாகனங்கள் எவ்வளவு பதிவாகின்றன என்று பார்த்து, R.T.O. அலுவலகம் அமையக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்குமானால் நிச்சயமாக அது அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *26*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**26—**

**சீரமைப்பு**

***33783—திரு. எச். வசந்தகுமார்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாங்குநேரி அரசு மருத்துவமனையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாங்குநேரி அரசு மருத்துவமனைக்குக் கட்டடப் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.2.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் *திரு. எச். வசந்தகுமார்.*

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நாங்குநேரி அரசு